

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை, ஆம் ஆத்மி கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் எஸ்.ஏ.என்.வசீகரன், மாநில மகளிர் அணி தலைவி ஸ்டெல்லா மேரி, வடசென்னை மாவட்டத் தலைவர் பாரூக், தென்சென்னை மாவட்டச் செயலாளர் மணிகண்டன் ஆகியோர் நேற்று (12.3.2024), காலை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேரில் சந்தித்தனர்.

# நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு

# அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி ஆதரவு!

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினை அக்கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் எஸ்.கர்ணன் சந்தித்து தெரிவித்தார்!



**சென்னை, மார்ச் 13 -**

**முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் தமிழ் மாநில குழு மாநிலப் பொதுச்செயலாளர் எஸ்.கர்ணன் மற்றும் மாநில நிர்வாகிகள் நேரில் சந்தித்து எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு ஆதரவு அளித்தனர்.**

இதுகுறித்த விவரம் வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் தமிழ் மாநிலக்குழு பொதுச்செயலாளர் எஸ்.கர்ணன் மற்றும் தேசியச் செயலாளர்கள் எஸ்.சுரேஷ்தேவன், பி.எஸ்.தேவன் உள்ளிட்ட மாநில நிர்வாகிகள், நேற்று (12.3.2024), காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேரில் சந்தித்து எதிர்வரும் நாடாளு மன்றத் தேர்தலில், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு அனைத்து தொகுதிகளிலும் பாடுபடுவதாக தெரிவித்தனர்.

# அரியலூர் மாவட்டத்தில் புதிய பேருந்து வழித் தடம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர், மாரச் 13 -

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், சின்ன ஆனந்தவாடி கிராமத்தில், தமிழ்நாடு அரசுப் போக்கு வரத்துக் கழகம் (கும்ப லிட், திருச்சி மண்டலம், ஜெயங்கொண்டம் கிளை சார்பில் புதிய பேருந்து வழித்தடத்தினை தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவ சங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா முன்னி லையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பொது மக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு திட்டங் களை தொடர்ந்து செயல் படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பொது மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப நகரங்கள் முதல் கிரா மங்கள் வரை பேருந்து வசதி ஏற்படுத்தித் தரப் பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் இன்றைய தினம் பொதுமக் களின் கோரிக்கைக்கு ஏற்ப ஜெயங்கொண்டம் சின்ன ஆனந்தவாடி மற்றும் சின்ன ஆனந்தவாடி ஜெயங் கொண்டம் புதிய பேருந்து வழித் தடத்தினை தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவ சங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அதன்படி ஜெயங் கொண்டம் கிளை நகரப் பேருந்து, நகரப்பேருந்து வழித்தடம் எண் 010A, காலை 8.15 மணிக்கு ஜெயங்கொண்டம் ஆனந்த வாடி (வழி) உடையார் பாளையம், பரணம், இரும் புலிகுறிச்சி, சோழன்குறிச்சி வழியாக தொட்டு தினசரி ஒரு நடை இயக்கப்ப டும்.

இதேபோன்று காலை 9.15 மணிக்கு சின்ன ஆனந்தவாடி ஜெயங்கொண்டம் (வழி) சோழன்குறிச்சி, இரும்புலிக்குறிச்சி, பரணம், உடையார் பாளையம் வழியாக தொட்டு தினசரி ஒரு நடை இயக்கப்படும்.

இப்புதிய பேருந்து வழித்தடம் நீட்டிப் பால் சின்ன ஆனந்த வாடி, சோழன்குறிச்சி பகுதி பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் பயனடைவார்கள். எனவே, இப்பேருந்து வசதியினை அனைவ ரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவ சங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்கு வரத்து கழகம் (கும்ப) லிட், திருச்சி மண்டல பொது மேலாளர் எஸ்.சக்திவேல், கோட்ட மேலாளர் (பெரம்ப லூர்) ஆர்.ராமநாதன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கங்கா தாரிணி, உடையார் பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, ஒன்றியச் செயலாளர் கள் பூ.செல்வராஜ், வி.எழில் மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், தொ.மு.ச. நிர்வாகிகள் பி.வி.அன்பழகன், சேகர், கொளஞ்சி, குமார், தமிழ் நாடு அரசு போக்குவரத்து கழக ஊழியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## விழுப்புரம் சட்டமன்றத் தொகுதியில்

# புதிய பள்ளிக் கட்டிடம்!

## இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

விழுப்புரம், மார்ச் 13 -

கழகத் தலைவர், முத லமைச்சர் அவர்களின் ஆணைக்கினங்க, விழுப் புரம் சட்டமன்ற உறுப்பி னரும், மாநில மருத்துவர் அணி இணைச் செயலா ளருமான டாக்டர் இரா. இலட்சுமணன் விழுப் புரம், காணை தெற்கு ஒன்றியம், தெளிமேடு ஊராட்சி, ஒன்றிய தொடக்கப்பள்ளியில், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட் டப்பட்ட கூடுதல் பள்ளி வகுப்பறை கட்டிடத்தை திறந்து வைத்தார்.

இதில் ஒன்றியக் குழு பெருந்தலைவர் கலைச் செல்வி, வட்டார வளர்ச்சி அலுவலர், மாவட்டக் கவுன்சிலர் சிவக்குமார், மாவட்ட நிர்வாகிகள் சுந்தரமூர்த்தி, கொத்த மங்கலம் சந்திரசேகர், ஒன்றிய நிர்வாகிகள் பழனி, செல்வம், செல்வ ராஜ், கருணாகரன், மதன், புனித ஐயனார், சிவ ராமன், நாராயணசாமி, ராஜேந்திரன், ஒன்றியக் கவுன்சிலர் ஜெயாகுமரன், ஊராட்சி மன்றத் தலை வர்கள் விமலா அறிவழ கன், கோனூர் சிவசங்கர்,

கிளை செயலாளர் கள் கிருஷ்ணமூர்த்தி, அரிகிருஷ்ணன், கிளைக் கழக நிர்வாகிகள் முருகன், தர்மராஜ், ஏழுமலை, கண்ணன், அன்பழகன், செல்வம், தங்கவேல், குமார், திருமால், முனு சாமி, மணி, பன்னீர் செல்வம், சுபாஷ், சிவ குமார், சக்கரவர்த்தி, கோபாலகிருஷ்ணன், எத்திராஜ், காமதேவன், செல்வம், வடிவேலு, வெங்கடேசன், கிரி தாசன், இளைஞர் அணி நிர்வாகிகள் குமரன், ரமணன், மணியரசன், கோனூர் நிர்வாகிகள் முருகன், செந்தில், மண் ணாங்கட்டி, கொத்தமங் கலம் நிர்வாகிகள் மணி கண்டன் காளிதாஸ், தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் கதிர வன், ராகுல் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.


